யாழ்ப்பாணம்

## ★ சமாதான முயற்சிகளை சந்திரிகா கைவிடார்

### பாலபத்தபெண்டி கூறுகிறார்

(கொழும்பு)

சமாதானப் பாதையில் முட்டுக்கட்டைகள் தடைகள் ஏற்பட்டாலும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு அரசாங்கம் உறுதி கொண்டுளளது. இவ்வாறு ஜனாதிபதியின் செயலாளரான திரு. கே. பாலபத்தபெண்டி தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்:

சமாதானமுயற்சிகளை கைவிடுவதற்கு ஜனாதிபதி திருமதி

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 12 இதழ் 47
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 26-3-1995

### ஜனாதிபதி சந்திரிகாவுக்கு புதுடில்லியில் வரவேற்பு

(புதுடில்லி)

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்தியாவிற்கான நான்கு நாள் விஜயத்தை முன்னிட்டு நேற்று புதுடில்லியில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மாவும், பிரதமர் நரசிம்மராவும் ஜனாதிபதி சந்திரிகாவை வரவேற்றார்கள்.

ஜனாதிபதியை கௌரவிக்குமுகமாக 21 பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன

முப்படைகளினது அணிவகுப்பு மரியாதையையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

(4ம் பக்கம் பார்க்க)

# புலிகளுடனான பேச்சு மற்றும் இனப்பிரச்னை தீர்வு குறித்து ராவுக்கு சந்திரிகா விளக்கம்

## ஹைதராபாத்தில் ஒரு மணி நேரம் சந்திப்பு

[புதுடில்லி]

இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு குறித்தும் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் குறிததும் இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவுக்கு இலங்கை ஜனாதிபதி திருமதி சந்திரிகா நேற்று மாலை பிரதமர் ராவின் வாசஸ்தலத்தில் வைத்து விளக்கமளித்துள்ளார்.

இந்தியாவுக்கு 4 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அங்கு சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா நேற்று மாலை பிரதமர் திரு. நரசிம்மராவின் ஹைதராபாத் வாசஸ்தலத்தில் அவரைச் சந்தித்து ஒரு மணி நேரத்திற்கும் மேல் பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

இதன்போது இலங்கை இனப்பிரச்னை தீர்வு குறித்தும் அதற்காக இலங்கை அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகள் பற்றியும் இதுதொடர்பாக விடுதலைப்புலிகளுடன் நடாத்தப்பட்டு வரும் சமாதானப் பேச்சுக்கள் குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா விரிவாக

(4-ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னை தீர்வுக்கு கிளிங்டன் ஆதரவு

(வாஷிங்டன்)

இனப் பிரச்னைத் தீர்வுக்காக இலங்கை எடுத்துவரும் முயற்சிகளுககு அமெரிக்கா என்றும் ஆதரவாக இருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதராக நியமனம் செய்யப்பட்ட திரு. ஜயந்த தனபாலவுக்கு பதவிப் பொறுப்பை வழங்கி உரையாற்றுகையி

(4ம் பக்கம் பார்க்க)

## நீடித்த தீர்வை காண்பதற்கு காலக்கெடு குறிப்பிட முடியாது

### புதுடில்லியில் சந்திரிகா

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னைக்கு இறுதியான நிலையான தீர்வொன்றைக் காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் ஆக்கபூர்வமான முறையில் நடைபெறுவதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு நான்குநாள் உத்தியோக பூர்வ விஜயததை மேற்கொண்டு நேற்றுக் காலை புதுடில்லி வந்துசேர்ந்த போது ஜனாதிபதி சந்திரிகா செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

எனினும் இனப்பிரச்னையை தீர்ப்பதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்பதுபற்றி அவர் எதனையும் தெரிவிக்க மறுத்ததுடன் நீடித்ததொரு தீர்வை

(4ம் பக்கம் பார்க்க)

4ம் கட்ட பேச்சில்

## அரசியல் தீர்வு பற்றி மட்டுமே பேச்சு

(கொழும்பு)

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு சம்பந்தப்பட்டதாக மட்டுமே இருக்குமென அரசுதரப்பு உறுதிபடத் தெரிவித்துள்ளது. அன்றுடப் பிரசினை பற்றி இதில் எதுவும் பேசப்படமாட்டாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல்தீர்வு சம்பந்தப்பட்ட பேச்சுக்களில் அமைச்சர் பலர் இடம்பெறுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அன்றுடப் பிரச்னைகள் எதுவும் தீர்க்கப்படாத நிலையில் அவை

(4ம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழகங்களில்

## கலைப்பீட அனுமதியில் இனி தரப்படுத்தல் இல்லை

[கொழும்பு]

பல்கலைக்கழக கலைப்பீட அனுமதியில் இனிமேல் தரப்படுத்தல் இருக்கமாட்டாது தகுதி அடிப்படையிலேயே இருக்கும் என பிரதி கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால உறுதியளித்துள்ளார்.

வட்டு. இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழா மேற்படி பாடசாலையின பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையினால் கொழும்பில் நடத்தப்பட்டபோதே இவ்வாறு கூறினார்.

(4ம் பக்கம் பார்க்க)

★ பிரபாவுக்கானகடிதத்தில்

## பூநகரி முகாம் பற்றி சந்திரிகா எதுவுமே குறிப்பிடவில்லை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனுககு ஜனாதிபதி சந்திரிகா கடந்த சில தினங்களுக்கு முன் அனுப்பியுள்ள கடிதத்தில் பூநகரி படைமுகாம் குறித்து எதுவுமே குறிப்பிடவில்லை எனத் தெரியவருவதாக 'வீரகேசரி' பிரதம ஆசிரியர் திரு. சிவநேசச்செல்வன் பி. பி. ஸிக்கு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்: ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவுக்கு புறப்படுமுன் நேற்று முன்தினமிரவு அமைச்சர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட

(4ம் பக்கம் பார்க்க)

## பொருளாதார தடை நீக்கம் பற்றி படையினருடன் அரசு பேச்சு

(கொழும்பு)

வடபகுதிக்கு பொருட்கள் சென்றடைவதில் ஏற்பட்டுள்ள தடைகளை நீக்கும்முகமாக பாதுகாப்புப்படையினருடன் அரசு தரப்பினர் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்,

வடபகுதிக்கான தடைநீக்கம் செய்யப்பட்ட பொருட்கள் பொதுமக்களுக்கு தாராளமாக நியாயமான விலையில் கிடைப்பது உறுதி செய்யப்படும். தொடர்ந்தும் தடை செய்யப்பட்டுள்ள பொருட்களின் பட்டியலிலில் உள்ள சில பொருட்கள் மீதான தடையையும் நீக்கம் செய்வது தொடர்பாக நாம் ஆராய்ந்து வருகிறோம்.

(4ம் பக்கம் பார்க்க)

## பிரபா விடயம்; இந்தியா வற்புறுத்தும்?

(டில்லி)

இந்தியாவில் காங்கிரஸ் கட்சி தேர்தலில் பின்னடைவுகளை சந்தித்து வருவதால் மக்களிடம் மீண்டும் செல்வாக்கைக் கட்டி எழுப்புவதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை ராஜீவ் கொலை வழக்கிற்காக இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா கேட்கப்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மணமக்கள் தேவையா

எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள், 33 வயது செவ்வாய்க் குற்றமற்ற டொக்டருக்கு பெண் தேவை, மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம், (சி-1422)

### கல்லூரிக்கு காணி அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு விளையாட்டு மைதானம் இல்லாத பெரும் குறை அண்மையில் ஒரு பெரியாரின் அன்பளிப்பால் நீங்கி உள்ளது,

இக்கல்லூரிக்கு அருகில் உள்ள தமது சொந்தக் காணியைத் தற்போது பொட்சுவானாவில் வாழும் பெரியார் ஏ. ஜெயராசாவின் குடும்பத்தினர், திரு, ஜெயராசாவின ஞாபகார்த்தமாக கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கி உள்ளனர். :154

# பிறப்பு பதிவு விண்ணப்பம் ஏற்பது இடை நிறுத்தம்

(கொழும்புத்துறை)

யாழ். செயலகம் பிறப்பு இறப்பு, விவாகப் பதிவாளர் பணிமனையில் பிறப்பு விண்ணப்பம் ஏற்பது தற்காலிகமாக மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிகப் பதிவாளர் திரு. அ. பொன்னம்பலம் அறிவித்துள்ளார்.

கடந்த 1-8-1954ம் ஆண்டிற்குப் பிறகு பிறந்தவர்களுக்கான அத்தாட்சிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பொறுப்பேற்பது தற்காலிகமாகச் சென்ற 10ம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இவர்களுக்கான எழுதும் இரு பக்கப் படிவங்களும் முடிந்தமையே இதற்கு முக்கிய காரணம் எனக் கூறப்பட்டுள்ளது.

இருந்தும் கடந்த 1954ம் ஆண்டுக்கு முன்னர் பிறந்தவர்களினதும், மற்றும் இறப்பு, திருமணம் ஆகிய சான்றிதழ்களைப் பெறுபவர்களுக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் தற்பொழுது வழமை போல் ஏற்றுக் கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -154

## இன்று

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மகாவித்தியாலய பழைய மாணவர்சங்கத்தின்மாதாந்த அறிவியலரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி ப 4 மணிக்கு ,யாழ்ப்பாணத்தில் தமிழ் நாடகங்கள், என்னும் பொருள்பற்றியாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. எஸ். ஜெயசங்கர் சொற்பொழிவாற்றுவார்.

0 0

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவு விளையாட்டு அபைச்சில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 1995ம் ஆண்டு தடகள விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி ப2-00 மணிக்குயாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்யாழ் பிரதேச செயலாளர் கலாநிதி க. குணராசாதலைமையில் இடம் பெறும். 154

0 0

(கொழும்புத்துறை)

உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் இலங்கைக்கிளையின் விசேட கூட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு இல, 33, பருத்தித்துறை வீதியில் உள்ள இயக்க அலுவலகத்தில் தலைவர் திரு. ஆ. சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. 154

0 0

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.30 மணி முதல் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் து. வைத்திலிங்கம் தலைமையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (71(

யாழ்ப்பாணத்தை

# பாதிக்கப்பட்ட மடவட்டமாக பிரகடனப்படுத்த வேண்டும்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தை ஒரு பாதிக்கப்பட்ட மாவட்டமாகத் தற்போதையசூழ்நிலையில் அரசு பிரகடனப்படுத்த வேண்டும்.

பல்கலைக்கழகம் புகுவதற்கு யாழ்ப்பாண மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை கொழும்பு அதிகாரிகளுக்கு விரிவாக எடுத்து விளக்குவதற்காக, யாழ்ப்பாணத்திலிருந்து 8 மாணவர்களுடன் கொழும்பு வந்திருந்த தென் இந்தியத் திருச்சபை ஆயர் எஸ். ஜெபநேசனை பி. பி. சி. முகவர் பேட்டி கண்ட போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும்கூறியதாவது: இந்தப் போர்க்காலச் சூழ்நிலையில் மின்சார வசதி, போக்குவரத்து வசதியில்லாத சூழலிலும்கூட, யாழ்ப்பாண மாணவர்கள் கொழும்பில் உள்ள வசதிபடைத்த மாணவர்களிலும் பார்க்கக் கூடுதலான புள்ளிகளை எடுக்கவேண்டிய நிலையில் உள்ளனர்.

வைத்தியம் பொறியியல் பௌதிகவிஞ்ஞானம் போன்ற துறைகளிலும் யாழ்ப்பாண மாணவர்கள் பல வசதிகள் அற்ற நிலையிலும் கூட கூடுதலான புள்ளிகளை எடுக்க வேண்டுமென்று பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு விதித்திருக்கும் முறையானது முற்றிலும் நியாயமற்றது

இவ்வளவு காலமும் இந்த முறை தொடர்ந்து பின்பற்றப்படுகிறது இந்த வருடத்திலிருந்தாவது இம் மாணவர்களின் குறைகளை கேட்டறிந்து யாழ். மாணவர்களுக்குள்ள வெட்டுப்புள்ளி முறையை மாற்றி நிவாரணம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றும் அவர் கூறினார். [கே-சி]

# இடம்பெயர்ந்த மக்களுக்கு சுயதொழில் கடன்

(யாழ்ப்பாணம்]

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஸ்ரீபன் குடியிருப்பிலுள்ள 15 குடும்பங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் சுய தொழில் கடன்களை வழங்கியுள்ளனர்.

நிறுவன கிராமிய உற்பத்திக் குழுப் பகுதியினரின் கிராமிய நிதிய கடன் வழங்கல் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு தலா 5000 ரூபா வீதம் மொத்தம் 75,000 ரூபா கடன்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அண்ணாமலை காலமானார்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும் நீண்டகால உறுப்பினருமான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே. அண்ணாமலை (வயது 71) காலமானார். 1960- 70 காலப் பகுதியில் பாராளுமன்றத்தில் நியமன உறுப்பினராககடமையாற்றிய இவர் சிரேஸ்ட தமிழ்அரசியல் வாதிகளுள் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. -க

## நான்குவார நிவாரணம்

(அரியாலை)

இடம்பெயர்ந்தோருக்கான தை மாதகடைசி இரண்டு வார நிவாரணமும் மாசிமாத முதல் இரண்டு வாரநிவாரணமும் சேர்த்து நான்குவார நிவாரணப் பொருட்கள் அரிசி சீனி, மைசூர்ப்பருப்பு ரவ்வை அமுல்கைலன்ட் பால்மா ஆகியன தற்பொழுது பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிளைகளில் வழங்கப்பட்டு வருகின்றன. 59

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995. 03. 26

ஞாயிறு இரவு

| | |
|---|---|
| 8.02 | இசையரங்கம்- நிகழ்ச்சியில் திருமதி மலர்விழி கனக்சபை அவர்களின் வீணைக்கச்சேரி |
| 8.30 | செய்திகள் |
| 8 40 | தொடர் நாடகம் - கருணைரவி எழுதும் ''காணி நிலம் வேண்டும்'' அங்கம் 5 |

1995. 03. 27

திங்கள் காலை

| | |
|---|---|
| 7.02 | மாவீரவணக்கம் |
| 7 15 | நீங்கள் கேட்டவை |
| 7 30 | செய்திகள் |
| 7 35 | பத்திரிகைச் செய்திகள் |
| 7 40 | நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி |

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995. 03. 26

ஞாயிறு மாலை

| | |
|---|---|
| 5.01 | சிந்தனைச் சிதறல் |
| 5.02 | எழுச்சிகீதம் |
| 5.10 | புதியவை |
| 5.15 | மழலைகளுக்காக |
| 5.30 | கதம்பம் |
| 6.00 | சிந்தனைக்குச் சிலவினாடிகள் |
| 6.02 | உங்கள் தெரிவு |
| 6.30 | மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும் |

# பாதிக்கப்பட்டோர் விபரங்கள் திரட்டு

(யாழ்ப்பாணம்)

1983ம் ஆண்டின் பின்னர் வன்செயல்கள் மற்றும் இயற்கைக் காரணங்களால் சொத்திழப்பு. உயிரிழப்பு மற்றும் அங்கவீனம் போன்ற பாதிப்புக்களுக்கு உள்ளான மக்கள் தொடர்பான விபரம் சேகரிப்பு, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணம் பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட கீழ்வரும் கிராம சேவகர் பிரிவுகளில் குறிக்கப்பட்ட திகதியில், பாதிக்கப்பட்டவர்கள் குடும்பப் பதிவு அட்டையுடன் குறிக்கப்பட்ட இடங்களுக்குச் சமுகம் தந்து பாதிப்பு விபரங்களைப் பதியுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நாளை 26-03-95 கொழும்புத்துறை கிழக்கு, பிரிவு ஜே/62 27-03-95 கொழும்புத்துறை மேற்கு, பிரிவு ஜே/63 பதியும் இடம்: ஜே/63 அலுவலகம்.

28, 29, 30, 31.03-95ம் திகதிகளில் பாஷையூர் கிழக்கு ஜே/64 பதியும் இடம்: ஜே/64 அலுவலகம்.

வடமராட்சி

27-03-95 கரணவாய் ஜே/350, பதியும் இடம்: ஜே/350 அலுவலகம்.

31-03-95சமரபாகுஜே/357 பதியும் இடம்: ஜே/354 அலுவலகம்.

31-03-95 உடுப்பிட்டி தெற்கு ஜே/354, பதியும் இடம்: ஜே/354 அலுவலகம்.

# கடலில் மூழ்கி இளைஞர் மரணம்

(ஆனைப்பந்தி)

தொழிலுக்குச் சென்ற இளைஞர் ஒருவர் கடலில் மூழ்கி மரணமானார். கடந்த வியாழன் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கொய்யாத் தோட்டம் பகுதியில் வசித்து வந்த நீக்கிலாபிள்ளை ஜாக் கோப்பு (வயது-17) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

வள்ளத்தில் சென்றுகொண்டிருந்தபோது இவ் இளைஞர் தவறுதலாக கடலினுள் விழுந்து விட்டதாகவும், கூடச் சென்ற மற்றைய இருவரும் கடலில் குதித்து இவரைக் காப்பாற்ற முயற்சியெடுத்தபோதிலும் அது பலனளிக்காது போகவே அவர்கள் கரைக்கு திரும்பி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 101

வடகிழக்கு பகுதியில்

# வெப்பநிலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் சூரியன் தற்போது உச்சநிலையில் இருப்பதனால், அடுத்த மாதம் 15ம் திகதி வரை இப் பகுதிகளில் வெப்பம் அதிகரித்துக் காணப்படும் என்று வானிலை அவதான நிலையங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் தற்போது ஆகக் கூடிய வெப்பநிலை 33.5 செல்ஸியஸாகவும், ஆகக் குறைந்த வெப்பநிலை 23.5 செல்சியஸாகவும் பதிவாகியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சராசரி வெப்பநிலை 30.6 செல்சியஸாக இருப்பதாகவும் அவதான நிலையங்கள் மேலும் தெரிவிக்கின்றன. வி-சி

ஆசிரியர்களுக்கு

# விழா முற்பணமும் விஷேட வங்கி கடனும்

(திருநெல்வேலி)

ஆசிரியர்களுக்கான விழா முற்பணமும் விசேட வங்கிக் கடனும் வழங்குவதற்காக இதுவரை விண்ணப்பிக்க தவறியவர்கள் இம்மாத இறுதிக்கு முன்பு அக்கொடுப்பனவுகளை பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

1995 மார்ச் மாதசம்பளம் பட்டியல் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டது. மேற்படி முற்பணங்களைப் பெற விரும்பும் ஆசிரியர் ஊழியர் பெயர் விபரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு கோட்டக் கல்வி அலுவலகம் கேட்டுள்ளது. (157-சி)


தமிழீழ மக்களே

இதோ !

பசுப்பால்

உங்கள் நலன் கருதிக் குளிரூட்டிப் பாதுகாத்து

நாள் முழுவதும் பால் வழங்கும் சேவையை

வழங்குவது

V

யாழ். ஆரியகுளம் சந்தியில்

அமைந்த

வானவில்

எந்நாளும் வாங்கிடுவீர்

என்றும் பயனடைவீர்

(ஏ-4846)

யாழ்ப்பாணம் நல்லூர் ... நூலகம்.

### மணிவாக்கு

பிறருடைய பலவீனத்தை அடையாளம் கண்டுகொள்கின்றவனே, பெரிய மனிதனுக வாழ்க்கை நடாத்துகிருன்.

—கண்ணதாசன்.

# இனப்பிரச்னைத் தீர்விலேயே சந்திரிகாவின் எதிர்காலமுள்ளது

(கொழும்பு)

இனப்பிச்ரனை தீர்வு விடயத்திலேயே ஜனதிபதி சந்திரிகாவின் எதிர்கால அரசியல் வாழ்வு தங்கியுள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று கூறியுள்ளது

இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு; தேவையற்ற யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி எனக் கூறியே திருமதி சந்திரிகா ஆட்சியை கைப்பற்றினர், பின்னர் முன்னைய ஆட்சியாளரைப் போலன்றி தாங்கள் விவேகமாகவும், நேர்மையாகவும் முன்னெச்சரிக்கையுடனும் சமாதான முயற்சிகளை மேற்கொள்வோம். எனக் கூறி புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்தார்.

ஆனல் முன்னைய ஆட்சியாளர்கள் மீது என்னென்ன குறைகளை கூறினரோ அவற்றை விட கூடிய தவறுகளை தற்போது திருமதி சந்திரிகா மேற்கொண்டு வருவதுபோல் தெரிகிறது.

இனப்பிரச்னைக்கு நல்லதொரு தீர்வை முன்வைக்கப்போவதாக கூறி ஒரு தீர்வுத் திட்டமும் தயாரிக்கப்பட்டு விட்டதாகக்கூறும் அவர் இதுவரை அதனை வெளியிடவில்லை ஏன் அதனை தொடர்ந்து மூடிமறைத்து வருகிறர் என்பது புலனாகவில்லை.

இந்நிலையில் ஜனதிபதியின் அணுகுமுறைகள் தோல்வியை தழுவும் சந்தர்ப்பம் எழுந்துள்ளதுடன் தமிழரை ஏமாற்றும் முயற்சியாகவே இருக்கும் போல் தென்படுகிறது. இது அவரது அரசியல் வாழ்க்கையையே ஸ்தம்பிதமடையச் செய்துவிடும்போல் தென்படுகிறது. எனவே திருமதி சந்திரிகா இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் தவறிழைப்பாரேயானல் இதற்கான பலனையும் அவர் விரைவில் சந்திப்பார் எனவும் அப்பத்திரிகை கூறியுள்ளது. -சி

## நமது நோக்கு

### மன்னர் மனு!

மன்னர் மாவட்டப் பிரஜைகள் குழு, அம்மாவட்ட மக்களின் பிரச்னைகளை விளக்கி ஜனதிபதிக்கு மனுவொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த மாவட்ட மக்கள் எத்தகைய அவல நிலையில் வாழ்க்கை நடாத்தி வருகிறர்கள் என்பது அவர்களின் கோரிக்கைகளைப் பரிசீலிக்கும்போது தெரிய வருகிறது.

ஐ தே க ஆட்சி—பாதுகாப்பைக் காரணம் காட்டி, அழுத்தங்கள், தடைகள் போட்டு, "கொடுங்கோன்மை ஆட்சி என்ருல் என்ன என்று தெரியவேண்டுமா? மன்னருக்கு வாரீர்; மக்களின் அவலங்களைப் பாரீர்!" என்று நடைமுறையில் காட்டவா இக்கொடூரங்களைச் செய்தது?

விவசாயம், கடற்றொழில், கல்வி, சுகாதாரம், போக்குவாத்து, தொலைத் தொடர்புகள் போன்ற பல்வேறு பிரிவுகளிலும் மக்கள் படும துன்பங்கள் தொகுக்கப்பட்டதோடு, உடனடியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளும் பட்டியலிடப்பட்டன.

உலகிலே —துரிதமாக வளர்ந்து வரும் தொழில் நுட்ப வசதிகளால் பொருண்மிய அபிவிருத்தி பல மடங்கு அதிகரிதது வரும் இந்த வேளையில்—மன்னர் மாவட்டத்தில்—மிகக் குறைந்தளவு அடிப்படை வசதிகளே மறுக்கப்பட்டால், மக்கள் எப்படித் தமது வாழ்வுக்கான வருமானத்தைப் பெற முடியும்?

ஓர் இன மக்களை—பல முனைகளிலும் தாக்கி அழித்துவிட்டால், தாயகக் கோரிக்கையோ, உரிமைப பிரச்னையோ இல்லாது போய்விடும் என்று எண்ணிக்கொண்டா அரசு செயற்பட்டது?

நிலத்தை நோக்கி அடிக்கப்படும் பந்து மீண்டும் மேலே வீறிட்டு எழும் என்பதைக்கூடவா அறியாது செயற்பட்டனர்?

பழைய ஆட்சியின் பதினேழு ஆண்டுக் கொடூரங்களை எடுத்துக் கூறி, அமைதியை ஏற்படுத்திச் சொர்க்க பூமியை உருவாக்குவோம என உறுதி கூறிததான் புதியவர்கள் அரியணை அமர்ந்தனர்.

இயல்பு வாழ்க்கையை உருவாக்குவதில் கவனம் செலுத்தாது, சாக்குப் போக்குகள் கூறிவந்தால் மக்கள் தொடர்ந்தும் வாய் மூடி மௌனிகளாகவா இருப்பார்கள்?

## இராசி பலன்

26-03-1995

ஞாயிற்றுககிழமை

(தமிழுக்கு பங்குனி-12)

தசமி முற்பகல் 11 30 உத்தராடம் முற்பகல் 9.02 வரை. அமிர்தசித்தயோகம், இராகுகாலம் மாலை 4.48 முதல் 6.15 வரை சுபவேளை காலை 9.15 முதல் 10.45 வரை.

மேஷம்: மனக்களிப்பு, வெற்றி வாய்ப்பு, பயண நன்மை.

இடபம்: வயிற்றில் ரோகம், காரியதடை, அலைச்சல்.

மிதுனம்: அந்நியர் விரோதம். பதட்டம், வீண்விரயம்.

கடகம்: நண்பர் உதவி. பயனுள்ள செயல், சுபச்செய்தி.

சிங்கம்: பெரியோர் ஆசி, வாக்கு வன்மை. விருந்துண்ணல்.

கன்னி: புறம் கூறுதல், பெண்பகை, குடும்பபிரிவு.

துலாம்: தொழில்நஸ்டம், வழிப்பயம், அகங்காரம்.

விருச்சிகம்; சுபகாரியம், எதிர்பாராத நன்மை, பண வரவு.

தனுசு: அதிகாரிகள் சீற்றம் பணமுடை, கோபவார்த்தை.

மகரம்: முயற்சி பலிதம், முதியோர் சிந்தனை, கடித உறவு.

கும்பம்: வீண்மனப்பிரமை, கடன் தொல்லை, வெறுப்பு.

மீனம்: அன்னியோன்ய உறவு. இனசன வரவு, பொருள்வரவு.

— ஜோஸ்யர்

## பலதும் பத்தும்

### உடல் வீக்கம்

உடலில் சில பகுதிகள் வீங்குவது நோயல்ல; அது ஒரு நோயின் அறிகுறி; உடலின் செல்கள், திசுக்கள் ஆகியவற்றின் இடைவெளிகளில் சருமத்தின் அடியில் நீர் தேங்குவதால் உடல் வீங்கும்.

உடல் வீங்கி இருப்போரைப் பார்த்து, "நல்ல சாப்பாடு" என்கிறேம். ஆனல் உண்மை அதுவல்ல. யுத்தம், பஞ்சம் ஆகிய காரணங்களால், போஷாக்கில்லாத உணவால் உடல் வீங்குமாம்!

இதனல் பலவீனம், சிறுநீரக நோய், முற்றிய காச நோய், கல்லீரல் சுருக்கம், 'எண்டோகிரைன்' எனப்படும் நாளங்களின் சுரப்பி நோய்கள் ஆகியவற்ருலும் உடல் வீங்கும்.

சிலவகை ஊசி மருந்துகள், உணவுகள் ஆகியவற்றின் ஒவ்வாமையால் அங்கு மிங்கும் திட்டுத் திட்டாக வீக்கங்கள் தோன்றுமாம்.

— மயூரன்

# தமிழ்கட்சிகள்கூட்டமைப்பால் அரசுக்கு பெரும் தலைவலி

(கொழும்பு)

அரசுக்கு ஆதரவு வழங்கும் நான்கு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு அமைப்பை உருவாக்கியிருப்பது சந்திரிகா அரசுக்கு பெரும் தலைவலியாக இருக்குமென கருதப் படுகிறதாம்.

இ. தொ. கா., ஈ. பி. டி. பி. புளொட், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளே திரு. தொண்டமான் தலைமையில் கூட்டமைப் பொன்றினை உருவாக்கியுள்ளன.

இக்கட்சிகள் இனப்பிரச்னை தீர்வு தொடர்பாகவும், அரசியல் அமைப்பு மாற்றம் மற்றும் ஜனதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு குறித்து கூட்டாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் சிலயோசனைகளை சமர்ப்பித்துள்ளன.

இந்த அமைப்புகளின் கூட்டணி தற்போது நடைபெறும் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுக்களை பாதிக்கும் விதத்தில் நடந்து கொள்ளக்கூடுமென அரசுதரப்பில் கருதப்படுகிறதாம்.

மேற்படி நாலுகட்சிகளும் பொ. ச. மு. வுக்கு ஆதரவளித்து வருவதால் ஜனதிபதி சந்திரிகா இவர்களது கூட்டமைப்பு குறித்து அக்கறைகாட்டி வருவதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் இ. தொ. கா தலைவர் அமைச்சர் தொண்டமானும் பிரதி அமைச்சரும் மலையக மக்கள் முன்னணித் தலைவருமான திரு. பி சந்திரசேகரனும் அடிக்கடி சந்தித்து பேசுவதும் ஜனதிபதிக்கு பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளதாம். (சி)

# 20 ஐ.ஐ.தே.மு.உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சியில் இணைந்தனர்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை சேர்ந்த 20 உறுப்பினர்கள் பிரதமர் திருமதி. சிறிமா தலைமையில சுதந்திரக்கட்சியில் சேர்ந்துள்ளனர்.

இந்த இருபது உறுப்பினர்களையும் பொ. ச. மு. எம். பி. திரு. எதிரிவீர பிரேமரத்ன சு க, வில் இணையச் செய்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் அரசியல் முக்கியத்துவத்தை குறைக்கும் நோக்கில் அதன் தோழமைக்கட்சியான சுதந்திரக்கட்சியே இவ்வாறுனதொரு செயலில் ஈடுபட்டமை வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது என ஐ.ஐ தே. மு. வினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

காமினி, லலித் ஆகியோரினல் ஆரம்பிக்கப்பட்ட இக்கட்சி தற்போது நான்கு பிரிவாக பிளவுபட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. சி

# ரூ. 50,000 நஷ்டஈடு கோரி ஹேமாவுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

முன்னுள் ஜனதிபதி பிரேமதாஸாவின் மனைவி ஹேமா பிரேமதாஸாவுக்கு எதிராக தொழில் நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருமதி ஹேமா நாட்டின் முதல் பெண்மணியாக இருந்த காலத்தில், 11 வயதுச் சிறுமி ஒருவரை அலரி மாளிகையில் வேலைக்கு அமர்த்தியிருந்தார் எனினும் அதற்கான சம்பளக் கொடுப்பனவைக் கடந்த 10 வருடங்களாக அந்தச் சிறுமியிடமோ அல்லது அச்சிறுமியின் குடும்பத்தவரிடமோ கொடுக்கவில்லை.

இது தொடர்பாக அச்சிறுமியின் குடும்பத்தவர் மனித உரிமைகள் முன்னேற்ற அமைப்பு ஒன்றில் புகார் தெரிவித்திருந்தனர். இதையடுத்து அந்த மனித உரிமைகள் அமைப்பு தொழில் ஆணையாளரிடம் இது குறித்து முறைப்பாடு செய்திருந்தது.

கடந்த 10 வருடங்களாக தமது மகளுக்கு ஒரு சதத்தையேனும் சம்பளமாக கொடுக்கவில்லை என்றும் திருமதி ஹேமாவிடமிருந்து நஷ்டஈடாக 50 ஆயிரம் ரூபாவை பெற்றுக் தருமாறும் பெற்ரேர் கோரியுள்ளனர். -சி

### நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

"முருகு" வின் நல்லைக் கந்தன் பாமாலை நூல் வெளியீடும் இசை அரங்கும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இம்மாதம் 31ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப.2 30 மணிக்கு நவாலியூர் நா. சச்சிதானந்தன் தலைமையில் நடைபெறும்.

# அன்னைபூபதிக்கு பலாகுதியிலும் அஞ்சலி

(பண்டத்தரிப்பு)

அன்னை பூபதியின் 7-ம் வருட நினைவை முன்னிட்டு வலிகாமம் மேற்கு பகுதியில் முக்கிய சந்திகள தோறும் அன்னரின் உருவப்படம் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது.

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்' பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆகிய வற்றின் முன்றல்களிலும் அன்னை பூபதியின் உருவப் படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது. பாடசாலைகள், வர்த்தகநிலையங்கள் ஆகிய வற்றிலும் உருவப் படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுகின்றது. சந்திகள் தோறும் பதாகைகள், சிகப்பு, மஞ்சல் நிற கொடிகள் கட்டப்பட்டுள்ளன. (72-சி)

### தவக்கால நற்சிந்தனை

"என் ஆயன் ஆண்டவர்: எனக் கென்ன குறைவு."
(சங். 22:1]

சிதறிப் போன ஆடுகளை ஒன்று சேர்க்க வந்தவர் நம் நல்லாயன் கிறிஸ்து. மந்தைகளுக்காக தம் சிந்தையைக் கொடுத்து நிந்தைகளை ஏற்றுக் கொண்டவர். அந்த உண்மை ஆயனை உணந்து வாழ்ந்தால் நமக்கு குறைவில்லை பசும் புல மேய்ச்சல் நிலத்திற்கு என்னை அழைத்துச் செல்வார்.

— தா. மைதிலி

எங்கள் மண்ணுக்காக போர் தொடுப்போம்
எங்கள் மண்வளம் காக்க மரங்களை நாட்டுவோம்

# பிரபா பற்றி சந்திரிகாவுடன் பிரதமர் ராவ் பேசவேண்டும்

## குமரி அனந்தன் கோரிக்கை

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை இந்தியாவிற்குகொண்டு வரும் பிரச்னை குறித்து இந்தியா வந்துள்ள இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் விவாதிக்கவேண்டும் என்று பிரதமர் பி வி. நரசிம்மராவை தமிழ்நாடு இ. காங்கிரஸ் தலைவர் திரு. குமரி அனந்தன் கேட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணைகளுக்காக புலிகள் இயக்கத் தலைவர்களில் ஒருவரான பொட்டு அம்மானையும் இந்தியாவுக்கு கொண்டு வருவது குறித்து திருமதி சந்திரிகாவிடம் இரு தரப்புப் பேச்சுவார்த்தைகள் நடத்தும்போது எடுத்துரைக்குமாறும் பிரதமருக்கு திரு. குமரி அனந்தன் அனுப்பியுள்ள செய்தியொன்றில் கேட்டுள்ளார்.

கச்சதீவு தொடர்பாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை இலங்கை அரசு முறையாக பின்பற்றுததால் இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள தாக்கப்படும் பிரச்னைகள் குறித்தும் இலங்கை ஜனாதிபதியுடன் பிரதமர் ராவ் பேச வேண்டும் என்றும் திரு. குமரி அனந்தன் கேட்டுள்ளார். -ரி

கதிர்காமத்திலிருந்து

# யாழ்ப்பாணத்திற்கு பாதயாத்திரை

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர், யுவதிகள் வெகுவிரைவில் தென்னிலங்கை மக்களின் சமாதானச் செய்தியை தாங்கிக்கொண்டு கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பாதயாத்திரை ஒன்றை மேற்கொள்வுள்ளனர்.

தேசிய சேவைகள் மன்றத் தலைவர் கலாநிதி திருமதி குமாரி நவரத்தின மகரகமவில் உள்ள மன்ற தலைமைக் காரியாலயத்தில் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை தென்னிலங்கையிலிருந்து விரைவில் யாழ்ப்பாணம் நோக்கி 1000 பௌத்த பிக்குகள் பாதயாத்திரை மேற்கொள்ளவுள்ளதும் குறிப்பிடத்தக்கது சி

# அரச அதிபர்களுக்கு மேலதிக பதவி

[கொழும்பு]

மாவட்ட செயலாளர்கள், அரசாங்க அதிபர்களுக்கும் மேலதிக செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது

பிரதேச நிர்வாகங்கள் பரவலாக்கும் வகையிலேயே இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது. உள்நாட்டு அமைச்சின் மேற்படி ஆலோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது

இதேவேளை நிர்வாக பரவலாக்கலில் பிரதேச செயலர்களிற்கும் மேலதிக பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. —சி

# அகதிகள் அந்தஸ்து கோருவதில் இலங்கையரே முதலிடம்

(ரொறன்ரோ)

கனடாவில் அகதிகள் அந்தஸ்து கோருவோர் பட்டியலில் இலங்கை முன்னணியில் திகழ்கிறது.

கடந்த ஆண்டில் மட்டும் இலங்கையர்கள் 2,875 பேர் கனடாவில் புகலிடம் கோரி விண்ணப்பித்துள்ளனர் என கனேடிய அரசு கூறியுள்ளது.

இலங்கைக்கு அடுத்தபடியாக அகதிகள் அந்தஸ்து கோருவோர் பட்டியலில் உள நாட்டு போராலும் பஞ்சத்தாலும் பாதிக்கப்பட்ட சோமாலியா உள்ளது. இதேவேளை அகதிகள் அந்தஸ்து கோருவோரின் விண்ணப்பங்களில் 70 சதவீதமானவை1994ல்கனடாவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

1993-ம் ஆண்டை விட 15 சத வீதத்தால் இந்தத் தொகை அதிகரித்துள்ளது. கடந்த வருடம் அகதிகள் அந்தஸ்து கோரியோரில் 1/3 பகுதியினர் இலங்கை, சோமாலியா, ஈரானைச் சேர்ந்தவர்கள் என்பதும்குறிப்பிடத்தக்கது. —சி

# சுப்பிரமணியசுவாமி இஸ்ரேல் விஜயம்

(சென்னை)

ஜனதா கட்சித்தலைவர் திரு. சுப்பிரமணிய சுவாமி இந்திய அரசின் சார்பில் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இஸ்ரேல் சென்றுள்ளார்.

இஸ்ரேல் புறப்படுவதற்கு முன்னர் திரு. சுப்பிரமணிய சுவாமி நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவையும், இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவையும் கொல்ல புலிகள் திட்டமிட்டுள்ளதாக கூறியுள்ளார்

ஆந்திராவில் உள்ள மக்கள் யுத்தக் குழுவும், அஸாமில் உள்ள ஐக்கிய விடுதலை முன்னணியும விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுகின்றன என்றும் இது பாகிஷ்தானிய உளவுப் படையின் அனுசரணையுடன் நடைபெறுவதாகவும் கூறினார்.

தான் இஸ்ரேலில் இருக்கும்போது இஸ்ரேலிய உளவு ஸ்தாபனமான மொஸாட்டுடன் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாகவும் மொஸாட் 20 கமாண்டோக்களை தனக்கு தந்தால் அவர்களின் உதவியுடன் பிரபாகரனை கைது செய்து தம்மால் இந்தியாவுக்கு கொண்டுவரமுடியுமெனவும் கூறியுள்ளார், சி

# யாழ். பல்கலைக்கழகத்திற்கு 30 கம்பியூட்டர்கள்

(கொழும்பு)

யாழ்ப்பாண பலகலைக்கழகத்திற்கு பிரிட்டிஷ் அரசு அன்பளிப்புச் செய்த 30 கம்பியூட்டர்கள், மற்றும் விலை உயர்ந்த தொழில்நுட்ப சாதனங்கள் நேற்று கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களிற்கு மேலாக கொழும்பு துறைமுகத்தில் முடக்கி வைக்கப்பட்ட இந்த சாதனங்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க பிரிட்டிஷ் தூதரகம் முயற்சி செய்துவந்தபோதும் பாதுகாப்பு காரணங்களுக்காக அனுமதி மறுக்கப்பட்டு வந்தது.

இதுதொடர்பாக பிரிட்டிஷ் தூதரகம் புதிய அரசுடன் தொடர்பு கொண்டதையடுத்து தற்போது இதற்கு பாதுகாப்ப அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. —சி

### பொருளாதார

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானப் பேச்சுக்களிற்கு காலதாமதம் ஏற்பட்டாலும் அது நிறுத்தப்படவில்லை. தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். —சி

### இனப் பிரச்னை

1ம் பக்கத்தொடர்ச்சி)

லேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்போது அமுலில் இருக்கும் போர் தவிர்ப்பு நடவடிக்கையை வரவேற்பதுடன் இந்த நடவடிக்கை நிச்சயம் இனப்பிரச்னை தீர்வுக்கு வழி வகுக்கும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார். -ரி-சி

### சமாதான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரிகா குமாரதுங்க தயாரில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்,

இந்த யுத்தத்தால் நிமிடத்திற்கு 48,000 ரூபா செலவாகின்றது. இதனை எவரும் விரும்பவில்லை. இந்த யுத்தத்தினுல் ஏற்படும் மானிட அவலங்களையும் எவரும் விரும்பவில்லை. இந்த நாட்டில் சமாதானத்தையே அனைவரும் விரும்புகின்றனர் என்றும் திரு. பலபத்தம்பண்டி தெரிவித்தார். ரி சி

### பல்கலைக் கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

பல்கலைக்கழகங்களில் ஏனைய பீடங்களிற்கான அனுமதியிலும் தகுதி அடிப்படையை மட்டுமே கடைப்பிடிப்பது குறித்து நாம் ஆலோசித்து வருகிறோம். மண்ணெண்ணெய் விளக்கில் படிக்கும் வடபகுதி மாணவர்கள்கூட தரப்படுத்தல் முறையினுல் பாதிக்கப்படுகிறார்கள் எனவும் குறிப்பிட்டார். —சி

### புலிகளுடனான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமளித்துள்ளதுடன் தாம் வழங்கவுள்ள அதிகாரப் பரவலாக்கல் குறித்தும் கூறியுள்ளார்.

இந்த விடயம் சமாதானமான முறையில் தீர்க்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி அப்போது பிரதமர் நரசிம்மராவ் வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இருதரப்பு உறவுகள் குறித்தும் பொருளாதார, வர்த்தக உறவுகள் குறித்தும் இருவரும் விரிவாக பேசியுள்ளனா.

இதன்போது இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு திருமதி சந்திரிகா அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பை பிரதமர் ராவும் ஏற்றுக்கொண்டார். இவரது இலங்கை விஜயத்திற்கான திகதி பற்றி பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பின்போது இந்திய தரப்பில் பிரதமர் ராவுடன் வெளிவிவகார அமைச்சர் திரு. பிரணப்முகர்ஜி, வர்த்தக அமைச்சர் திரு. பி. சிதம்பரம் ஆகியோரும் கலந்துகொண்டனர். இலங்கை தரப்பில் ஜனாதிபதி சந்திரிகாவுடன் வெளியுறவு அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் வர்த்தக அமைச்சர் திரு. கிங்ஸ்லி விக்கிரமரத்னவும் கலந்துகொண்டனர். —சி

### ஜனாதிபதி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ராவுடன் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகளை நேற்று ஆரம்பித்தார்.

இருதலைவர்களும் இரு நாடுகளுக்கும் பொருத்தமான விடயங்கள் பற்றியும், பொருளாதார வர்த்தக நடவடிக்கைகள் பற்றியும் விசேடமாக கவனம் செலுத்துவார்கள் என புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய கைத்தொழில் சம்மேளனம் இலங்கை ஜனாதிபதியை சந்திக்கும் வைபவமும் இந்த விஜய திட்டத்தில் அடங்கியுள்ளது.

இதேவேளை இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஜனாதிபதி மாளிகையில் விருந்தளித்து கௌரவித்தார். ரி சி

### பிரபாவுக்கான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாடொன்றைகூட்டி அதில் திரு. பிரபாகரனுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து விளக்கமளித்துள்ளார்.

அக்கடிதத்தில் பூநகரி படைமுகாம் பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை. ஆனுல் நாலாம் கட்டப் பேச்சுக்களுக்கு ஏப்ரல் 2-ம் திகதி முதல் 10-ம் திகதிக்கிடையில் திகதி ஒன்றை தருமாறும், வடபகுதி மீதான பொருளாதாரத் தடை குறித்து மீண்டும் பரிசீலனை செய்து மேலும் சில பொருட்கள் மீதான தடையை தளர்த்த முயல்வதாகவும, மீன்பிடித் தடையை தளர்த்துவது குறித்து அரச தீவிரமாக ஆராய்வதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். -சி

### 4-ம் கட்டப் பேச்சில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்பான பேச்சுக்களை சிறிலங்கா அரசு முன்னுகவே நிறுத்தியுள்ளது.

இராணுவ முகாமை அகற்றி பூநகரிப் பாதை திறக்கப்படும் என்றபேச்சுக்குஇடமில்லை என அரசு இராணுவத்துக்கு உறுதியளித்துள்ளது.

மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான கடல்வலயதடை நீக்கப்படவில்லை. தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடை நீக்கப்படவில்லை.

அன்றுடப் பிரச்னைகள் எதனையும் தீர்க்காத நிலையில் அரசு அரசியல்தீர்வு பற்றிப் பேச்சுநடத்த முடிவுசெய்துள்ளது. ரி சி

### நீடித்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எட்டுவதற்கு ஒரு காலக்கெடுவை வரையறுக்கப் போவதில்லை எனவும் கூறினுர்.

எனது பயணம் இந்திய இலங்கை நட்புறவை மேலும் ஒருங்கிணைத்து வலுப்படுத்த உதவும் மேலும் பொருளாதர வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது பற்றியும் விவாதிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

பல்வேறு. இருதரப்பு மற்றும் பிராந்திய பிரச்னைகள் குறித்து பிரதமர் நரசிம்மராவுடனும் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு.பிரணப் முகர்ஜியுடனும் திருமதி சந்திரிகா பேச்சுகள் நடத்துவார்.

மீனவர் பிரச்னை, இலங்கை தமிழ் அகதிகளை குடியமர்த்துவது மற்றும் பல முக்கிய பிரச்னைகள் குறித்தும் பேச்கள் நடத்தப்படவுள்ளது. சி

### ஈ. பி. ஆர். எல். எவ் உறுப்பினர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட தமிழ் அகதிகளுடன் 30 ஈ பி. ஆர். எல். எவ் உறுப்பினர்களும் நாடு திரும்பியுள்ளனர்.

கடந்த 19ம் திகதி தமிழகத்திலிருந்து திருப்பி அனுப்பட்ட அகதிகளுடன் இந்த 30 பேரும் வந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் பெருந் தொகையான ஈ.பி. ஆர். எல். எவ். உறுப்பினர்கள் இருப்பதாகவும்அவர்களும் இதேபோன்று விரைவில் இலங்கை திரும்புவார்கள் என்றும் ஈ. பி.ஆர். எல். எவ். வட்டாரங்கள் தெரிவித்தன. ரி-சி

### இன்று பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட உதைபந்தாட்டச் சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு தலைவர் திரு. சி. தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. -வி-சி

### பிரபா விடயம்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

படலாம் என்று ஏ. எவ். பி. செய்தியாளர் அமல் ஜயசிங்க பி. பி. சி. சந்தேசியவிறகுத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: சந்திரிகாவின் இந்திய விஜயம் பல மாதங்களுக்கு முனபு தீர்மானிக்கப்பட்டுள்ளதால் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் தற்போது மந்தநிலை அடைந்திருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக இந்தியாவுடன் சந்திரிகா பேசமாட்டார் எனவும் கூறினுர். -ம-சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B